DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 328/2024 Crime No. 251/2024 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3/LW3- சங்கர் | Village | |
| Father Name | சுப்பிரமணியம் | Taluk | |
| Age | 56 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூச்சிக்கல்லூரில் குடியிருந்து கொண்டு, ஜவுளி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது ஊரைச் சேர்ந்தவர். கடந்த 10.06.2024 ம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில், குறிச்சியிலுள்ள அ.சா.1 ன் பஞ்சர் கடையில் இருந்தபோது ஊர் பொது மக்கள் வந்து அ.சா.1 யிடம் குறிச்சி கரட்டிலுள்ள மரங்களை வெட்டி அங்குள்ள காட்டையே ஆஜர் எதிரி அழிப்பதாகவும், அந்த இடத்தில் குடிசை போட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதாக கூறியதாகவும், அதை பார்ப்பதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அங்கு சென்றதாகவும், அங்கு வெட்டப்பட்ட மரங்களை அ.சா.1 அவரது செல்போன் மூலம் போட்டோ எடுத்ததாகவும், அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரி எதற்காக போட்டோ எடுக்கிறீர்கள் என்று கூறி அ.சா.1 செல்போனை பிடுங்கி கீழே எறித்துவிட்டு, கழுத்தைப் பிடித்து தள்ளி போடா என்று சொல்லி அடிக்க வந்ததாகவும், கேள்விப்பட்டேன். பின்னர் அன்றைய தினம் மாலையில் நான், அ.சா.1, அ.சா.2 மற்றும் ரங்கசாமி ஆகியோர்கள் மீண்டும் அந்த இடத்திற்கு சென்றபோது அங்கிருந்த ஆஜர் எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் பேசி, செருப்பால் அடித்துவிட்டார். பின்னர் நாங்கள் விலக்காட்டி விட்டோம். பின்னர் அ.சா.1 அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 328/2024 Crime No. 251/2024 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2/LW2- மயில் (எ) காமராஜ் | Village | |
| Father Name | நல்லப்பன் | Taluk | |
| Age | 56 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கூச்சிக்கல்லூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது ஊரைச் சேர்ந்தவர். கடந்த 10.06.2024 ம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில், குறிச்சியிலுள்ள அ.சா.1 ன் பஞ்சர் கடையில் இருந்தபோது ஊர் பொது மக்கள் வந்து அ.சா.1 யிடம் குறிச்சி கரட்டிலுள்ள மரங்களை வெட்டி அங்குள்ள காட்டையே ஆஜர் எதிரி அழிப்பதாகவும், அந்த இடத்தில் குடிசை போட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதாகவும் கூறினார்கள். அதை பார்ப்பதற்காக நானும், அ.சா.1 ம் அங்கு சென்றோம். அங்கு வெட்டப்பட்ட மரங்களை அ.சா.1 அவரது செல்போன் மூலம் போட்டோ எடுத்தார். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரி எதற்காக போட்டோ எடுக்கிறீர்கள் என்று கூறி அ.சா.1 செல்போனை பிடுங்கி கீழே எறித்துவிட்டு, கழுத்தைப் பிடித்து தள்ளி போடா என்று சொல்லி அடிக்க வந்தார். பின்னர் நாங்கள் அங்கிருந்து வந்து விட்டோம். பின்னர் அன்றைய தினம் மாலையில் ஊரிலிருந்த நால்வரை அழைத்துக் கொண்டு மீண்டும் அந்த இடத்திற்கு சென்றபோது அங்கிருந்த ஆஜர் எதிரி அ.சா.1 ஐ செருப்பால் அடித்துவிட்டார். பின்னர் நாங்கள் விலக்காட்டி விட்டோம். பின்னர் அ.சா.1 அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC. No. 328/2024 Crime No. 251/2024 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW1- கந்தசாமி | Village | |
| Father Name | ராமசாமி | Taluk | |
| Age | 83 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.08.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் கருப்பமூப்பனூரில் குடியிருந்து கொண்டு, பஞ்சர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10.06.2024 ம் தேதியன்று, மாலை சுமார் 05.00 மணியளவில், நான் குறிச்சியிலுள்ள எனது பஞ்சர் கடையில் இருந்தபோது ஊர் பொது மக்கள் வந்து என்னிடம் குறிச்சி கரட்டிலுள்ள மரங்களை வெட்டி அங்குள்ள காட்டையே ஆஜர் எதிரி அழிப்பதாகவும், அந்த இடத்தில் குடிசை போட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்து வருவதாகவும் கூறினார்கள். அதை பார்ப்பதற்காக நானும், என் கடையில் இருந்த மயில் (எ) காமராஜ் என்பவரும் அங்கு சென்றோம். அங்கு வெட்டப்பட்ட மரங்களை நான் எனது செல்போன் மூலம் போட்டோ எடுத்தேன். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரி எதற்காக போட்டோ எடுக்கிறீர்கள் என்று கூறி எனது செல்போனை பிடுங்கி கீழே எறித்துவிட்டு, கழுத்தைப் பிடித்து தள்ளி போடா என்று சொல்லி அடிக்க வந்தார். பின்னர் நான் எனது கடைக்கு வந்து அங்கிருந்த நால்வரை அழைத்துக் கொண்டு மீண்டும் அந்த இடத்திற்கு சென்றபோது அங்கிருந்து ஒரு டிப்பர் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தது. நாங்கள் காரில் சென்றதால் டிப்பரை நிறுத்திவிட்டு இறங்கி வந்த ஆஜர் எதிரி என்னை கீழே தள்ளி செருப்பால் எனது கழுத்தின் மீது அடித்துவிட்டார். பின்னர் நான் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள செருப்பால்தான் ஆஜர் எதிரி, என்னை அடித்தார் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். **அந்த செருப்பு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**